ஒன்றிய அரசு தமிழகத்திற்கு

எத்தகைய தடைகள் ஏற்படுத்தினாலும் அதை முதல்வர் முறியடிப்பார்!

அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேச்சு!

சிவகங்கை, ஆக.12-

சிவகங்கை மாவட்டம் காரைக்குடியில் தமிழக முதல்வர் அவர்களால் மாணவர்களுக்கான கோவையில் துவங்கி வைக்கப்பட்ட தமிழ்ப் புதல்வன் திட்டம் காரைக்குடி பழனியப்பன் கலையரங்கில் மாவட்ட ஆட்சியர் திருமதி ஆசாஅஜித் தலைமையில் எம்.எல்.ஏக்கள் எஸ். மாங்குடி, திருமதி தமிழரசி ரவிக்குமார் முன்னிலையில் நடைபெற்றது. மாவட்ட சமூகநல அலுவலர் திருமதி ரதிதேவி வரவேற்றுப் பேசினார்.

நிகழ்ச்சியில் கலந்து கொண்டு மாணவர்களுக்கு தமிழ்ப் புதல்வன் திட்டத்திற்கான வங்கி கணக்கினை வழங்கி கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசியதாவது.

தமிழக முதல்வர் அவர்களால் தினசரி தமிழகத்தில் திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது. அந்த திட்டங்களுக்கு செயல் வடிவம் கொடுத்து நிதி ஒதுக்கி செயல்படுத்தப்பட்டும் வருகின்றது. இத்திட்டம் சிவகங்கை மாவட்டத்தில் மாணவர்கள் பயன் பெறும் வகையில் அமைந்துள்ளது. இந்த அரசு ஒவ்வொரு நாளும் திட்டங்களை தீட்டி அதனை நிறைவேற்றி வருகிறது. இதில் முதல்வர் கூறியது போல் பல திட்டங்கள் முத்தான திட்டங்கள் ஆகும். அத்தகைய திட்டங்களில் ஒன்றான முத்தான திட்டம் தமிழ்ப் புதல்வன் திட்டம் ஆகும். இத்தகைய திட்டங்கள் வாழ்நாள் முழுவதும் நிலைத்திருக்கும். ஏற்கனவே மகளிருக்கான பல்வேறு திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகின்றது.

இத்திட்டம் குறித்து இங்கு பேசிய மாணவர்கள் தங்களது உணர்ச்சியை தெரியப்படுத்தினார்கள். பெரும்பாலான மாணவர்கள் மகளிருக்கு பெண்களுக்கு திட்டங்கள் நிறைவேற்றப்படுகின்றது. நமக்கு இத்தகைய திட்டங்கள் இல்லையே என்ற மனக்குறை இருந்தது. அதைப் போக்கிடும் வகையில் ஆண்களுக்கு மாணவர்களுக்கு திட்டங்கள் இல்லை என்ற குறை இதன் மூலம் நீக்கப்பட்டுள்ளது. அதற்காகவே இத் திட்டம் துவக்கப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் அவர்கள் சமூக விஞ்ஞானியாக யோசித்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தேர்தல் நேரத்தில் முதல்வர் அவர்கள் பல்வேறு வாக்குறுதி தந்தார். மகளிர் உரிமைத் தொகை மற்றும் தமிழ்ப் புதல்வன் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் ஆகியவைகள் தேர்தலில் வாக்குறுதிகளாக கூறப்படவில்லை. தலைவர் கலைஞர் போல் தேர்தல் நேரத்தில் சொல்லாததையும் முதல்வர் தளபதி அவர்கள் நிறைவேற்றி வருகிறார். மகளிர் பொருளாதார வளர்ச்சி பெற மகளிருக்கான உரிமைத் தொகை திட்டத்தினை முதல்வர் அவர்கள் அறிவித்து அதை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். முதல்வர் அவர்கள் பெண்களை உயர்த்தும் வகையில் திட்டங்கள் கொண்டு வந்த காரணம் சமநிலையில் பெண்கள் உயர வேண்டும் என்பதற்காகத் தான்ஆகும். ஆண் ஆதிக்கம் குறைந்து மகளிர் வளர்ச்சி பெற வேண்டும். அவர்கள் வாழ்வில் முன்னேற வேண்டும் என்பதற்காக இத்தகைய திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு வருகிறது. சமுதாயத்தில் உள்ள இத்தகைய மேடு பள்ளங்களை சமன்படுத்தவே இத் திட்டங்கள் முதல்வரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

தமிழக முதல்வர் அவர்கள் சமூக விஞ்ஞானியாக யோசித்து திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தேர்தல் நேரத்தில் முதல்வர் அவர்கள் பல்வேறு வாக்குறுதி தந்தார். மகளிர் உரிமைத் தொகை மற்றும் தமிழ்ப் புதல்வன் மாணவிகளுக்கு புதுமைப்பெண் திட்டம் ஆகியவைகள் தேர்தலில் வாக்குறுதிகளாக கூறப்படவில்லை. தலைவர் கலைஞர் போல் தேர்தல் நேரத்தில் சொல்லாததையும் முதல்வர் தளபதி அவர்கள் நிறைவேற்றி வருகிறார். மகளிர் பொருளாதார வளர்ச்சி பெற மகளிருக்கான உரிமைத் தொகை திட்டத்தினை முதல்வர் அவர்கள் அறிவித்து அதை சிறப்பாக செயல்படுத்தி வருகிறார். எதிர்காலத்தில் ஆண்களுக்கும் முதல்வர். அவர்கள் மகிழ்ச்சி அடையும் வகையில் திட்டங் களை அறிவிப்பார் என்று எதிர்பார்ப்போம். நாடு பொருளாதார வளர்ச்சி அடைய கல்வி வளர்ச்சி முக்கியம்ஆகும். இதனால் தான் தலைவர் கலைஞர் அவர்கள் கல்விக்கு முக்கியத்துவம் கொடுத்து வருகிறார் .ஒரே நாடு ,ஒரே தேர்தல் என்று ஒன்றிய அரசு மக்களை குழப்பி வருகிறது. தமிழகத்தில் அனைத்து திட்டங்களையும் முதல்வர் சிறப்பாக நிறைவேற்ற காரணம் இந்தியாவிற்கே தமிழகம் வழி காட்ட வேண்டும் என்று விரும்பி தான் இத்தகைய திட்டங்களை நிறைவேற்றி வருகிறார். தமிழக மாணவர்கள் உலக அளவில் இந்திய அளவில் தலைமை பொறுப்பினை ஏற்க வேண்டும் உயர் கல்வியில் முதலிடம் பெற வேண்டும். இது 100 சதமாக உயர வேண்டும் என்பதற்காக பல்வேறு திட்டங்களை தீட்டி வருகிறார். நிதி நெருக்கடி இருப்பது என்பது உண்மைதான். ஆனால் அதை காரணம் காட்டி முதல்வர் அவர் கள் எந்த திட்டங்களையும் நிறைவேற்றா மல் விடவில்லை. சொன்ன வாக்குறுதிகளையும், சொல்லாத வாக்குறுதிகளையும் நிறைவேற்றி வருகிறார். தலைவர் கலைஞர் அவர்கள் சொல்லாதையும் நிறைவேற்று வார் சொல்லியதையும் நிறைவேற்றுபவர் என்ற பெயர் உண்டு .தலைவர் கலைஞர் வழியில் முதல்வர் தளபதி அவர்களும் செய்துவருகிறார் என்ற பெயர் ஏற்பட்டுள்ளது. இந்தியாவிலேயே இரண்டாவது மாநிலமாக தமிழகம் தான் ஒன்றிய அரசுக்கு அதிக அளவில் வரி செலுத்துகிறது.ஆனால் ஒன்றிய அரசு ஒரு ரூபாய்க்கு 29 பைசா தான் தருகிறார்கள்.நம்மைவிட வரிகுறைவாக செலுத்தும் மாநிலங்களுக்கு அதிக அளவில் நிதி தருகிறார்கள். தமிழகத்தை ஓரவஞ்சனையாக பார்க்கிறார்கள். இது வேடிக்கையாக உள்ளது. தமிழகத்தின் வளர்ச்சியை இதன் மூலம் அவர்கள் தடுக்க பார்க்கிறார்கள். ஆனால் அதை தலைவர் தளபதி முதல்வர் அவர்கள் வியூகம் அமைத்து அந்த முயற்சியை முறியடிப்பார் .இதனால் ஒன்றிய அரசு தமிழகத்தின் வளர்ச்சியை எந்த நிலையிலும் தடுக்க முடியாது. தமிழக முதல்வர் இந்தியாவில் நம்பர் ஒன் என்று அழைக்கப்பட்டு வருகிறார். அவர் அதை விரும்பவில்லை. தமிழகம் இந்தியாவில் முதலிடம் பெற வேண்டும் என்பதற்காக அல்லும் பகலும் அயராது உழைத்து வருகிறார். இதற்காக பல்வேறு திட்டங்களை தீட்டி அதை செயல்படுத்து வருகிறார். எனவே மாணவர்கள் அவருக்கு நன்றியுடன் இருக்க வேண்டும். அவருக்கு ஆதரவு தர வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் பேசினார்.

உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில்

பழங்குடியினர்க்கென - 50 படுக்கைகள் கொண்ட தனிப்பிரிவு!

மருத்துவம் – மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் அறிவிப்பு!

நீலகிரி, ஆக.12-

நீலகிரி மாவட்டத்தில், ரூ.461.18 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகளையும், மருத்துவ மனையில் ஏற்படுத்தப்பட்டுள்ள அறுவை சிகிச்சை அரங்கங்கள், பரிசோதனை நிலையங்கள், நீர்வாக கட்டிடம், புறு நோயாளிகள் பிரிவு, உள் நோயாளிகள் பிரிவு உள்ளிட்ட பிரிவுகளையும், சுற்றுலாத்துறை அமைச்சர் கா.ராமச்சந்திரன் தலைமையில், மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வுதுறை அமைச்சர் மா.சுப்பிரமணியன் நேற்று (10.08.2024) நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி. லட்சுமி பவ்யா தண்ணீரு முன்னிலை வகித்தார்.

இந்நிகழ்வில், மருத்துவம் (ம) மக்கள் நல்வாழ்வு துறை அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்தாவது:-

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படியும், வழிகாட்டுதலின்படியும், நீலகிரி மாவட்டத்தில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை கட்டுமான பணிகளை சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து இன்று நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

உதகையில் கட்டப்பட்டு வரும் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையானது விரைவாகவும், தரமாகவும் கட்டப்பட்டு, விரைவில் பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. சுற்றுலாத்துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து நானும், நீலகிரி மாவட்டத்தில் கடந்த 3 ஆண்டுகளாக பல்வேறு துணை சுகாதார நிலையங்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள், அதற்கு தேவையான கட்டங்கள், செவிலியர் குடியிருப்பு, மருத்துவமனைகளில் புற நோயாளிகளுக்கான கட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு மருத்துவ உட்கட்டமைப்பு வசதிகள் மேற்கொள்ளப்பட்டு, பொதுமக்களின் பயன்பாட்டிற்கு திறந்து வைத்துள்ளோம்.

மேலும், 12.01.2022 அன்று பிரதமர் அவர்களால், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் முன்னிலையில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி திறந்து வைக்கப்பட்டு, மிகச் சிறப்பாக நடைபெற்று கொண்டிருக்கிறது. இந்த அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவனைக்கு 700 படுக்கைகள் கொண்ட கட்டுமான பணிகள் வேகமாக நடைபெற்று வருகிறது. பல்வேறு வளர்ச்சித்திட்டப் பணிகள் நீலகிரி மாவட்டத்தில் நடைபெற்று கொண்டிருந்தாலும், பொதுமக்கள் பலருக்கும் பயன்படக்கூடிய இந்த மருத்துவமனை கட்டுமான பணிகள் விரைவாகவும், தரமாகவும் இருக்க வேண்டும் என்ற நோக்கில் சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்களுடன் இணைந்து பல முறை நேரில் ஆய்வு மேற்கொண்டு வருகிறோம்.

மேலும், இயற்கை இடையூறு, மலைப்பகுதி மற்றும் வனப்பகுதி என்பதால் பல அனுமதிகளும், பல இடர்பாடுகளுக்கு மத்தியில் கட்டுமான பணிகள் வேகமாக நடைபெற்று, தற்போது முடிவடையும் தருவாயில் உள்ளது. இந்தியாவிலேயே மலை நகரத்தில் 700 படுக்கைகள் கொண்ட அதிநவீன வசதி கொண்ட மிகப்பெரிய மருத்துவமனை என்ற வகையில் இம்மருத்துவமனை உருவாகி வருகிறது. மருத்துவமனைக்கு தேவையான குடிநீரை பொறுத்தவரை பொதுப்பணித்துறை மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இம்மருத்துவமனையில் அதிநவீன் தொழில்நுட்பத்துடன் கூடிய எம்.ஆர்.ஐ ஸ்கேன், சிடி ஸ்கேன், டிஜிட்டல் எக்ஸ்ரே, புற நோயாளிகளுக்கான கட்டடம், உள்நோயாளிகளுக்கான கட்டடம், மத்திய பரிசோதனை நிலையம், ஸ்டெயின்லெஸ் ஸ்டீல் சுவர்கள் கொண்ட 12 அதிநவீன அறுவை சிகிச்சை அரங்கங்கள், தீவிர சிகிச்சை

பிரிவு மற்றும் இருதய சிகிச்சை பிரிவு கட்டிடம், நிர்வாக கட்டிடம், சலவையகம், சமையல் கூடம் என அனைத்து வசதிகளும் நிறைந்த மருத்துவமனையாக இம்மருத்துவமனை கட்டப்பட்டு வருகிறது. நேற்றைய தினம் பழங்குடியினர்களை கௌரவிக்கும் வகையில் நடைபெற்ற பூர்வீக குடிமக்களின் சர்வதேச தின விழா கொண்டாடப்பட்டது.

நீலகிரி மாவட்டத்தில், வசித்து வரும் பழங்குடியினர்களின் கோரிக்கைகளை நிறைவேற்றும் விதமாக தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் கடந்த சட்டப்பேரவை 110 விதியின் கீழ், 16வது அறிவிப்பாக 700 படுக்கைகள் கொண்ட உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பழங்குடியினர்களுக்கென 50 படுக்கைகள் கொண்ட தனி பிரிவு ஒன்று அமைக்கப்படும் என அறிவித்ததை தொடர்ந்து, அப்பணிகளும் வேகமாக நடைபெற்று வருகிறது.

இதில், 20 படுக்கைகள் பழங்குடியின மகப்பேறு மற்றும் குழந்தைகள் நலனுக்கான பிரிவாகவும், மீதமுள்ள 30 படுக்கைகள் பொது பிரிவாகவும் அமைக்கப்பெறும். அதன் உட்கட்டமைப்பு பணிகள் இன்று நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும், கோத்தகிரி அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் ரூ.3.03 கோடி செலவில் அவசர சிகிச்சை பிரிவு கட்டிடம், ரூ.1.25 கோடி செலவில் தெப்பக்காடு மற்றும் இத்தலார் அரசு ஆரம்ப சுகாதா நிலையங்களில் கூடுதல் கட்டடம் மற்றும் மருத்துவ அலுவலர் குடியிருப்பு கட்டடம், ரூ.14.80 கோடி செலவில் எமரால்டு அரசு மருத்துவமனையில் அவசர சிகிச்சை அரங்க கட்டடம் மற்றும் 50 படுக்கைகள் கொண்ட பிரிவு உள்ளிட்ட பல்வேறு மருத்துவ கட்டடங்கள் பொது மக்களின் பயன்பாட்டிற்காக திறந்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், ரூ.164.91 கோடி செலவில் கட்டப்பட்ட உதகை ஆர். கே.புரம் நகர்புற நல வாழ்வு மைய கட்டடமும், மசக்கல் துறை சுகாதார நிலைய கட்டடம் உள்ளிட்ட கட்டங்களும் பொதுமக்களின் பயன்பாட்டிற்காக கொண்டு வரப்பட்டுள்ளது. நீலகிரி மாவட்டத்தில் 37 அரசு ஆரம்ப சுகாதார நிலையங்கள் உள்ளது. இன்று தூனேரி அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் நோயாளிகளுக்கு அளிக்கப்பட்டு வரும் சிகிச்சைகள் மற்றும் பரிசோதனைகள் குறித்து, நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இம்மருத்துவமனைக்கு 2 மருத்துவர்கள் நியமிக்கப்பட்டிருந்த நிலையில் 2 மருத்துவர்கள் பணியில் ஈடுபட்டு வருகிறார்கள். மேலும் 2023 ஜூன் 6ம் நாள் அன்று கோயமுத்தூர் மாவட்டத்தில் முதல மைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க, இருதய நோயால் பாதிக்கப்பட்டுள்ள நோயாளிகளுக்கு உடனடியாக 3 வகையான 14 மருந்துகள் அடங்கிய லோடிங் டோஸ் என்ற மருந்து வழங்கும் திட்டம் துவக்கி வைக்கப்பட்டது.

நீலகிரி மாவட்டம் தூனேரி ஆரம்ப சுகாதார நிலையத்தில் இன்று ஆய்வு மேற்கொண்டபோது, கடந்த ஒரு ஆண்டு காலத்தில் ஒரு நபர் இத்திட்டத்தின் கீழ் பயன்பெற்றுள்ளார். கடந்த 30.07.2024 அன்று கேரள மாநிலம், வயநாட்டில் ஏற்பட்ட மிகப் பெரிய நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு உதவிடும் வகையில் தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் உடனடியாக ரூ.5 கோடி நிவாரணத்தொகையாக வழங்கியதோடு, 10 நபர்கள் கொண்ட மருத்துவக் குழுவினரை அனுப்பி வைத்தார்கள்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் பகுதியைச் சேர்ந்த திருமதி. அ.சபீனா என்பவர் தன்னம்பிக்கையுடன் தானாக முன்வந்து ஆற்றை கடந்து பாதிக்கப்பட்ட 30க்கும் மேற்பட்ட மக்களுக்கு முதலுதவி சிகிச்சை அளித்தது பொதுமக்களால் பாராட்டப்பட்டது. இவரின் சேவை பாராட்டும் வகையில் இன்றைய தினம் நினைவு பரிசு மற்றும் பொன்னாடை அணிவித்து கௌரவிக்கப்பட்டது. அதேபோல் நிலச்சரிவு ஏற்பட்ட பகுதிக்கு நேரடியாக சென்று மீட்பு மற்றும் மருத்துவ உதவிகள் செய்த 8 நபர்களும் கௌரவிக்கப்பட்டது.

இவ்வாறு அமைச்சர் தெரிவித்தார்.

முன்னதாக, அமைச்சர்கள், வயநாட்டில் ஏற்பட்ட நிலச்சரிவில் பாதிக்கப்பட்டவர்களுக்கு துணிச்சலாக ஆற்றைக்கடந்து மருத்துவ சேவை வழங்கிய திருமதி.சபீனா அவர்களின் குறும்படத்தினைப் பார்வையிட்டார்.

"தமிழினத்தின் ஒப்புயர்வற்ற தலைவர் சமூக நீதிக் காவலர்"

முத்தமிழறிஞர் கலைஞருக்கு "பாரத ரத்னா" விருது வழங்கிடுவீர்!

மதுரை, ஆக.11-

"தமிழினத்தின் ஒப்புயர்வற்ற தலைவர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கு 'பாரத ரத்னா' விருது வழங்க வேண்டும்" என்று அய்யன் திருவள்ளுவர் மன்றம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

ஒன்றிய அரசிற்கு
அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம் கோரிக்கை !

உலகெங்கிலுமுள்ள
தமிழ் மக்களின் நெஞ்சத்தில் நீங்காது
நிலைத்து வாழும்
தமிழ்த்தாயின் தவப் புதல்வர்
கலைஞர்
எழுத்தாற்றல்-பேச்சாற்றல்-படைப்பாற்றல்-

செயலாற்றல் - நினைவாற்றல் எனப்
பேராற்றல் பலகொண்ட
பன்முகத் தலைவர்.
ஆளுமைத் திறனில்
ஒப்பாரும் மிக்காரும்
இல்லாதவர்.

தமிழ் நிலத்தை - தமிழ்
இனத்தை - தமிழ் வளத்தை
உலகறிய உயர்த்திக்
காட்டியவர். இலக்கியத்
துறையில் முத்திரை
பதித்தவர். நெஞ்சுக்கு
நீதியாய் வாழ்ந்து
உயர்ந்தவர்.
குறள் ஓவியம் படைத்த
கோமான். தலைநகர்
சென்னையில் வான்புகழ்
வள்ளுவர் கோட்டம்
அமைத்த பெருந்தகை.
உலகு தொழும் அறிவுப்
பேராசான் குறளாருக்கு
சூழும் தென்கடல்
ஆடும் குமரியில்
வான் முட்டும் சிலை
வடித்து "அய்யன் திருவள்ளுவர் " என
உலகிற்கு அறிவித்த
ஈமான்.
கலைத்துறையில்
ஈடும் - எடுப்பும் -
பெருமிதமும் கொண்ட
பிதாமகன்.
பெரியாரின் பிள்ளையாக -
அண்ணாவின் அருமைத்
தம்பியாக - ஐந்து முறை
அரசு கட்டில் ஏறிய
தஞ்சைத் தரணியின்
இராஜராஜன். இந்தியத்
துணைக் கண்டத்திலும்
ஆட்சி அதிகாரம் பெற்றவர்.
பெண்ணுரிமைக்காக -
சமூக நீதிக்காக சட்டம்
இயற்றி இந்தியாவிற்கே
வழிகாட்டிய திறமும்
உரமும் பெற்றவர்.

கவிதைப் பெருங் கடல் -
நட்பிற்கு இலக்கணம்
வகுத்த கொப்பெருஞ்சோழன்.
ஏழையின் சிரிப்பில்
இறைவனைக் கண்ட
எல்லாளர். வாடிய பயிரைக்
கண்டபோதேல்லாம் வாடிய
வள்ளலார். வாடிய உயிரை
கண்ணுற்றபோது
அடைக்கலம் தந்து
காத்திட்ட சித்தார்த்தன்.

"இப்படை தோற்கின்
எப்படை வெல்லும்" எனக்
கழகத்திற்கு தலைமை ஏற்று
ஐம்பதாண்டுகளுக்கு
மேலாக கட்டிக் காத்து, படை நடத்தி
வெற்றி கண்ட
கரிகால் பெருவளத்தான்

பரிதிமாற் கலைஞரின்
நூற்றாண்டுக் கனவை,
நம் ஊரில் - உணர்வில் -
உயிரில் கலந்திருக்கிற
உலகின் மூத்த உயர்தனிச்
செம்மொழியான
"தமிழ் மொழிக்கு"
"செம்மொழி ஏற்பு இசைவு"
ஒன்றிய அரசிடம் பெற்றுத்
தந்த "செம்மொழி கொண்டான்"
முத்தமிழறிஞர்
கலைஞர் ஆவார்.

இத்தகைய அனைத்து
சிறப்பிற்குரிய
கலைஞர் பெருந்தகைக்கு
முத்தாய்ப்பாய்

"பாரத ரத்னா"

விருதினை வழங்கி
பெருமை சேர்க்குமாறும்
பெருமை ஏற்குமாறும்

இந்திய ஒன்றிய அரசினை

" சமூக நீதிக் காவலர்
கலைஞர் அவர்களின்
நினைவு நாளில்

அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம் -
தமிழ்கூறும்
நல்லுலகம் சார்பில்
வேண்டி விரும்பி
கேட்டுக்கொள்கிறது.

க.வை. இராமகிருட்டினன்
செயலாளர் , அய்யன் திருவள்ளுவர்
இலக்கிய மன்றம் - மதுரை

அயலக தி.மு.க. குவைத் சார்பில் - முத்தமிழறிஞர் கலைஞருக்கு நினைவஞ்சலி!

புதுக்கோட்டை மு.பஷீர் அகமது தலைமையில் நிர்வாகிகள் பங்கேற்பு!

குவைத், ஆக.12-

முத்தமிழறிஞர் கலைஞர் 6ஆம் ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு 9-8- 2024 வெள்ளிக்கிழமை அன்று அயலக தி.மு.க. குவைத் சார்பில் நினைவஞ்சலி செயலாளர் புதுக்கோட்டை மு.பஷீர் அகமது தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் NRTIA பொறுப்பாளர் சிதம்பரம் நா.தியாகராசன்.பொருளாளர் பத்தமடை க.சிந்தா பக்கீர்.ஆலஞ்சியார்,ஆயிங்குடி ஜெ.சையது முஸ்தபா, ஆகியோர் முன்னிலையில் கழகத் தொண்டர்கள் தலைவனுக்கு புகழஞ்சலி செலுத்தினர் எண்பதாண்டு காலம் தமிழ் சமூக மேம்பாட்டிற்காக உழைத்த திராவிடப் பெருவுடையானுக்கு நன்றி செலுத்தினர். கலைஞரால் ஒவ்வொரு குடும்பமும் எதோ ஒருவகையில் பயனடைந்திருப்பதை பலரும் நினைவு கூர்ந்தனர்.

முனசந்தை சிக்கந்தர், பத்தமடை கே.என்.கே.நாகூர், புதுவை அறிவுமணி,திருவாரூர் ச.குமார், விழுப்புரம் ஜாஹங்கிர்,காட்டூர் சொ. ஆறுமுகம், பத்தமடை பாஞ்சி பீர்முகம்மது, கறம்பக்குடி ஜாபர் சாதிக்,ஜலில் முஸ்தபா,தஞ்சை ஷாத் அன்வர்,உளுந்தூர்பேட்டை நஜீர் அகமது, உளுந்தூர்பேட்டை வெங்கடேஷ், பாப்பாதியாக ராஜன், பேராவூரணி ரபீக், திருவாரூர் திரு வரங்கன்,சபரிவாசன், குடந்தை தியாகராஜன்,கொளத்தூர் கணேஷ், திட்டசேரி சாகுல் ஹமீது,ஜோசப் எடிசன்,நீடாமங்கலம் சதாம் உசேன், ஆர். முருகன், நசுரூதீன் முகமது, வேலன்புதுக்குடி ஜியாவுதீன், சேத்துப்பட்டு கணேசன்,ஆத்தூர் ஜான்பாஷா,புதுவை சபீக்கான், ஜானவாஷ், கோகுல் ராஜா,பத்தமடை காட்டுபாவா,சேகரை செல்லத்துரை,கார்த்திகேயன், கொல்லாபுரம் ஜாஹிர், மைதீன் பாஷா,தக்கலை ஜோசப் பெர்லின்,செந்தில் ராஜா,கறம்பக்குடி அப்பாஸ்,தாணி பாடி அஸ்ரப் அலி, அஸாருதீன், கணபதி, மதியழகன், அ. பொன்முடி,மயிலாடுதுறை இ.நாகேந்திரன், பிரேம் குமார், மன்னை ரபீக், ஈரோடு ஜான்பாஷா, அய்யணார், களந்தை மீரான், ஹாஜிஅலி, நெல்லை வில்சன், தச்சன்குறிச்சி ஜான்பாஷாஅப்துல் அஜீஸ்,மேலப்பாளையம் சாஹுல் ஹமீத், புகழஞ்சலியில் கலந்து கொண்டனர். பேரருளாளன் புகழ் வாழ்க! முத்தமிழறிஞர் புகழ் வாழ்க! என முழக்கமிட்டனர்.

முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் 6ஆவது ஆண்டு நினைவு நாளை முன்னிட்டு மாவட்டச் செயலாளரும் அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆலோசனைப்படி, பகுதிச்செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில் (7.8.2024) அன்று 139 அ வட்டக்கிளை அலுவலகத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்க ளின் திருவுருவப்படத்திற்கு வட்டச் செயலாளர் சை.மு.சேகர் தலைமையில் கழகத்தினர் மலர் மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினர். இதில் இ.வரதன், மா.ஏழுமலை, பூபதி.வெங்கடே சன், பெரியவர்.என்.சண்முகம், கொடி.து. சுரேஷ்பாபு, கே.விஜயகுமார், வி.வாசுதேவன், என்.ரமேஷ், பா.மோ.கார்த்திக்,பி.ராம தாஸ்,மு.மூர்த்தி, கா.மூர்த்தி.ஜோ.அந்தோணி, க.தமிழரசு,ப.மோகன்,து.மா.பொ.சி, கே.பூபதி, ஜெ.ஜெய்கணேஷ், ஏ.எம்.சேகர் மற்றும் பலர் பங்கேற்றனர்.